2022 ஏப்ரல் 20]

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *அதாவது* Hockey *மைதானம்,* ***அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் அது நிறுத்தி வைக்கப்படவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லிவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓணான்பாளையம் பகுதியில் 10 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான இடம் இருப்பதாகவும், அதேபோல வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் 4 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான இடம் இருப்பதாகவும் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *அந்த இடத்தை நேரடியாக ஆய்வு செய்து, வாய்ப்பு இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப, அந்தப் பகுதியில் நவீன விளையாட்டு மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

140—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***25288—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(அ) போளூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், போளூரில் E.S.I. மருத்துவமனை அமைக்க வேண்டுமென கேட்டிருக்கிறார்கள். தற்போதுள்ள விதிமுறைகளின்படி போளூரில் E.S.I. மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் ESI மருத்துவமனை, அதாவது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையே இல்லை. ஆனால், செய்யாறு, ஆரணி ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், அதாவது, dispensaries செயல்பட்டு வருகின்றன. இந்த மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போன்று செயல்படுபவையாகும். அதாவது, முதற்கட்ட சிகிச்சை மட்டுமே இங்கு அளிக்கப்படும். இரண்டாம் கட்ட சிகிச்சை, secondary care treatment இங்கு அளிக்கப்படுவதில்லை. ESI மருத்துவமனை இருந்தால் மட்டுமே உயிர் காக்கும் சிகிச்சைகள் அளிக்கப்படும்.

தற்பொழுது, தமிழகத்தில் எத்தனை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் செயல்படுகின்றன? இதில், மாநில அரசு எத்தனை மருத்துவமனைகளை நடத்துகிறது? மத்திய அரசின் ESI கழகம் எத்தனை மருத்துவமனைகளை நடத்துகிறது? தமிழகத்தில் எத்தனை மருந்தகங்கள் செயல்படுகின்றன? தற்பொழுது தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் ESI

2022 ஏப்ரல் 20]

மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன? தொழிலாளர்கள் நிறைந்த திருவண்ணாமலை மாவட்டத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள போளூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது இரண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. செய்யாறு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 11,998 காப்பீட்டாளர்களுடனும், ஆரணி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 3,502 காப்பீட்டாளர்களுடனும் இயங்கி வருகின்றன. புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க வேண்டுமானால், புதுடெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் விதிமுறைகளின்படி, குறைந்தபட்சம் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பதற்கு, மருத்துவமனை அமையும் இடத்திலிருந்து 25 கி.மீ. சுற்றளவில் குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டாளர்கள் வசிக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை அமைக்க இயலும். மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கட்டாயம் அந்த மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆகவே, அப்படி அந்த மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 5 ஏக்கர் நிலம் கட்டாயம் இருக்க வேண்டும். அந்த 5 ஏக்கர் நிலமும் தகுதியுள்ள இடமாக இருக்க வேண்டும். ஏனென்றால், பூமிக்கடியில் பாறை இருந்தால் அந்த இடத்தை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, அந்த இடத்தை எடுப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு சென்று, அந்த இடம் தகுதியுள்ள இடமா என்பதை ஆய்வு செய்த பின்னர், தகுதி இருக்கும்பட்சத்தில், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்பொழுது 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் செயல்படுகின்றன. இதில், 8 மருத்துவமனைகளை மாநில அரசும், 2 மருத்துவமனைகளை மத்திய அரசின் ESI கழகமும் நடத்தி வருகின்றன. மாநில அரசு, சென்னை அயனாவரம், சிவகாசி, வேலூர், சேலம், கோவை, மதுரை, திருச்சி, ஓசூர் ஆகிய இடங்களிலும், மத்திய அரசின் ESI கழகம், சென்னை கே.கே. நகர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் மருத்துவமனைகளை நடத்தி வருகின்றன. தமிழகம் முழுவதும் 226 இடங்களில் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது, தமிழகத்தில், திருப்பூர், தூத்துக்குடி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய 3 இடங்களில் ESI மருத்துவமனைகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் 5 இலட்சம் தொழிலாளர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். Shoe உற்பத்தி கம்பெனிகளின் தொழிலாளர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், மின் வாரியத் தொழிலாளர்கள், நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய தொழிலாளர்கள், தனியார் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், இரும்பு வார்ப்பட தொழிற்சாலைத் தொழிலாளர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: கற்சிலைகள் வடிவமைக்கும் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், அரசு M.R.M. மற்றும் தனியார் அரிசி ஆலைத் தொழிலாளர்கள், கல் குவாரி மற்றும் ஜல்லி machine தொழிலாளர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: செங்கல் சூளைத் தொழிலாளர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: குறிப்பாக, திருவண்ணாமலை நகரில் உள்ள, சிட்கோ தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள், unorganized sector-ல் பணியாற்றும் தொழிலாளர்கள் என

2022 ஏப்ரல் 20]

அனைவரையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து, ESI *காப்பீட்டுக் கழகத்தில்* enroll *செய்ய வேண்டும். இவர்களின் உடல் நலனைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. திருவண்ணாமலை மாவட்டத்தில்* ESI *திட்டத்தை அமல்படுத்த முதல் கட்ட கணக்கெடுப்பு,* pre-implementation survey *தொடங்கப்பட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், உரையை முடியுங்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *போளூரில்* ESI *மருந்தகம் அல்லது திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய தலைநகரான திருவண்ணாமலையில்* ESI *மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும். கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, சரி. அதாவது, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட, திருவண்ணாமலையில் இந்த மருத்துவமனை அமைய வேண்டுமென்று என்னிடத்திலே நேரடியாகப் பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். அதைத்தான் நம்முடைய போளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை கட்டுமானப் பணிக்கு 6–2–2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மத்திய பொதுப் பணித் துறையினரால் 6 கட்டங்களாக மருத்துவமனை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது; பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மருத்துவமனைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனையிடம் மாநில அரசு கட்டாயமாக ஒப்படைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டிலே எத்தனை மருத்துவமனைகள் இருக்கின்றன,*

dispensaries இருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். நானும் அந்த விவரங்களைக் கையிலே வைத்திருக்கிறேன். நீண்ட நேரம் செல்லக் கூடாது என்பதற்காகத்தான், அதையெல்லாம் சுருக்கி இந்தத் தகவலை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *அந்தப் பகுதியிலே அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை நானும் அறிவேன். ஆனால், 50,000 காப்பீட்டாளர்கள் இருந்தால்தான் மருத்துவமனையை உருவாக்க முடியுமென்று* ESI–*புது டெல்லியினுடைய உத்தரவு இருக்கின்ற காரணத்தால், உரிய ஆய்வு செய்து, உரிய அதிகாரிகளுடன் மேற்பார்வையை மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உங்களுடைய ஆர்வத்தின் அடிப்படையிலே அங்கே மருத்துவமனையை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, மனதிலே கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவிலே அந்த மருத்துவமனை உருவாவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

சுற்றுலாத் தலம்

***3573—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதி, தேவனாம்பட்டினம் சில்வர் பீச்சை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?